[1982 மார்ச் 19

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) பொள்ளாச்சி தாலூகாவில் தேவனூர் பள்ளத்திற்கு குறுக்கே எட்டு மண் கொரம்புகளும், ஐந்து அணைக்கட்டுகளும், ஆலாங்கடவு பள்ளத் திற்கு குறுக்கே 21 மண் கொரம்புகளும், ஆறு அணைக்கட்டுகளும் உள்ளன.

(ஆ) தண்டத் தீர்வையோடு ஏறக்குறைய ஆண்டொன்றுக்கு ரூ. 34,000 அரசுக்கு வருவாய் கிடைப்பதாக சம்பந்தப் பட்ட வருவாய் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

(இ) இது குறித்து அரசு தனியாக பரிசீலித்து முடிவெடுக் கும்.

(ஈ) ஆம்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே இந்த பொள் ளாச்சி தாலூகாவில் தனிப்பட்ட நபர்கள் கட்டிய அணைகள் மூலம் எவ்வளவு ஏக்கர் தண்ணீர் பாய்கிறது ? அரசுக்கு செலுத்துகின்ற தீர்வைக்குரிய கட்டணம் இந்த தனியார்கள் அணைகளிலிருந்து வசூலிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, அதைத்தான் என்னுடைய பதிலிலே தெரிவித்திருக்கிறேன். மொத்தம் 34,000 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு தண்டத் தீர்வையாக வசூல் செய்யப்படுகிறது. இதை அரசு எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

சின்னவேடப்பட்டியில் அமைக்கப்படவுள்ள குளம்.

*வினா எண் 563—திரு. கு. ரமணி—மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவை மாவட்டம் சர்க்கார் சாமக்குளம் பஞ்சா யத்து யூனியனைச் சேர்ந்த சின்னவேடப்பட்டி கிராமத்தில் 400 ஏக்கர் பூமியில் ஒரு பெரிய குளத்தை அமைக்க நடைபெற்று வந்த ஆய்வுப்பணி முடிந்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், குளத்தை அமைக்கும் வேலை எப் பொழுது ஆரம்பமாகும் ?

1982 மார்ச் 19]

(அ) ஆய்வுப் பணிகள் முடிந்து விட்டன. திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன.

(ஆ) தலைமைப் பொறியாளரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. திட்ட அறிக்கை கிடைத்த பின் அரசு முடிவெடுக்கும்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, குருடிமலைப் பகுதியில் வெள்ளக்காலத்தில் நீர் உற்பத்தி அதிகமாக இருப்பதால் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. இந்த வெள்ளப் பெருக்கைத் தடுக்கின்ற திட்டத்தின்கீழ் குருடிமலைப் பகுதியில் சிறு அணை கட்டித் தடுப்பதன் மூலம் வெள்ளக் காலத்தில் நிரம்பி வழிகின்ற தண்ணீரைத் தடுக்க முடியும். அதனால் கோவை நகருக்குள் வருகின்ற காட்டாற்று வெள்ளத்தையும் தடுக்க முடியும். ஆகவே, இந்த சின்னவேடப்பட்டி திட்டத்தோடு அந்த மலை அடிவாரத்தில் சிறு அணை கட்டும் திட்டத்தையும் சேர்த்து நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : முதலிலே கோவை மாவட்டத்திலே சின்னதடாகம் கிராமத்திற்கு அருகில் சங்கனூர் பள்ளத்தில் சுமார் 114 இலட்சம் மதிப்பீட்டில் 1,825 ஏக்கர் புஞ்சை நிலங்கள் பயன்பெறுவதற்காக நீர்த்தேக்கம் அமைக்க திட்டம் தீட்டப்பெற்றது. ஆனால் இத்திட்டம் ஆய்ந்தபிறகு, இத்தேக்கமானது காட்டாற்றின் குறுக்கே அமைக்க இருப்பதால் அணையில் வண்டல் நிறைந்து விடும் என்றும், மேலும் இத்திட்டத்தால் கரையோரங்களில் இருக்கும் ஏராளமான விலையுயர்ந்த தோட்ட நிலங்கள் மூழ்கிவிடும் என்றும் முதலில் கருத்து தெரிவித்தார்கள். எனவே இப்போது மாற்றுத் திட்டம் ஆய்வில் இருக்கிறது. அதன்படி சங்கனூர் பள்ளத்திற்குக் குறுக்கே ஒரு நீர் சேமிப்பு அணை 'பிக்-அப் அணிகட்' ஒன்றைக் கட்டி, 7.5 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய் மூலம் சின்னவேடப்பட்டி அருகில் கட்டப்படவிருக்கும் குளத்திற்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுதான் இப்போது இருக்கும் கருத்துரையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற வெவ்வேறு சிறுசிறு அணைகள் கட்டுவது பற்றி எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்தால், அது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.